# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | **:-** | **O.S.No.34/2019** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | **:-** | **வா.சா-02 (PW- 02)** |
| **பெயர்** | **:-** | **நந்தகுமார்** |
| **தேதி** | **:-** | **09-09-2025** |

**சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**01-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-**

வாதி தரப்பு 11-ஆம் சான்றாவணமாக உள்ள விருப்பாவணத்தில் என் தகப்பனாரின் சான்றொப்பம் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்தக் காலகட்டத்தில் எனக்கு எத்தனை வயது என்றால் 20 வயது இருக்கும். விருப்பாவணத்தில் உள்ள சொத்துக்களும் வழக்குச் சொத்துக் -களும் வெவ்வேறு என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வாதி தரப்பு 11 ஆம் சான்றாவணமாக உள்ள விருப்பாவணத்தில் இருக்கும் 02-ஆம் சான்றொப்பம் என் தகப்பனாரின் கையொப்பம்தான் என்று காட்ட வேறு ஆவணம் எதையேனும் நான் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. என் தகப்பனாரின் கையொப்பத்தை உறுதிசெய்ய நான் ஆவணங்கள் எதையும் தாக்கல்செய்யாத நிலையில் வாதி தரப்பு 11-ஆம் சான்றாவணத்தில் உள்ள 02-ஆம் சான்றொப்பம் என் தகப்பனாருடையதுதான் என்று நான் சொல்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**02-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-**

என் தகப்பனர் சாட்சி கையொப்பம் போடப்போவதாக சொன்னார். என்ன ஆவணம் என்று எனக்குத் தெரியாது. வாதி தரப்பு 11-ஆம்

சான்றாவணமாக உள்ள விருப்பாவணத்தில் உள்ள 02-ஆம் சான்றொப்பம் என் தகப்பனாரின் கையொப்பம்தான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.